## மியாட் மருத்துவமனையில்

# இதய வால்வுக்கான சிறுதுவார ஊடுருவைச் சிகிச்சை கருத்தரங்கம்

### வெளிநாட்டு நிபுணர்கள் பங்கேற்பு




சென்னை மியாட் மருத்துவமனையில் இதய வால்வுக்கான சிறு துவார ஊடுருவைச் சிகிச்சை குறித்த 2 நாள் கருத்தரங்கு நடந்தது. இதில் பங்கேற்ற இதய சிகிச்சை மைய இயக்குனர் நிக்கோலஸ் டோலுக்கு மியாட் மருத்துவமனை நிர்வாக இயக்குனர் மோகன் தாஸ் வாழ்த்து தெரிவித்தார். அருகில் மருத்துவமனை தலைவர் மல்லிகா மோகன்தாஸ், இணை நிர்வாக இயக்குனர் பிரீத்தி தேவி மோகன்தாஸ், டாக்டர்கள் வி.வி.பாஷி, விஜித் கே செரியன்.

சென்னை, ஏப். 5: சென்னை மியாட் மருத்துவமனையில் இதய வால்வுக்கான சிறுது வார ஊடுருவைச் சிகிச் சைக்கான கருத்தரங்கம் நேற்று தொடங்கியது. இக் கருத்தரங்கில் சிறுதுவார ஊடுருவைச் சிகிச்சையை மேற்கொள்ளும் முறை குறித்து திரையிடப்பட்டு விவாதிக்கப்பட்டது. இதில் இந்தியா, ஜெர்மனி உள்ளிட்ட நாடுகளை சேர்ந்த நூற்றுக்கும் மேற் பட்ட அறுவை சிகிச்சை நிபுணர்கள் கலந்து கொண்டனர். இக்கருத் தரங்கு இன்றுடன் நிறை வடைகிறது. கருத்தரங்கு நடைபெறும் அரங்கின் நுழைவாயிலில் அறுவை சிகிச்சை முறைகளை விளக் கும் வகையில் ஸ்டால்கள் அமைக்கப்பட்டுள்ளது.

கருத்தரங்கை குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்து,ஜெர்மனி நாட்டை சேர்ந்த பேராசிரியர் நிக் கோலஸ் டோல் பேசிய தாவது:

இதய வால்வுக்கான சிறுதுவார ஊடுருவைச் சிகிச்சையின் மூலம் மக் களுக்கு பெரும் நன்மைகள் உண்டாகும். ஏனென்றால் சாதாரணமாக செய்யும் அறுவை சிகிச்சையின் மூலம் 700 மில்லி ரத்தம் விரயமாகும். ஆனால், சிறு துவார அறுவை சிகிச்சை மூலம் வெறும் 200 மில்லி ரத்தம் மட்டுமே தேவைப்படும்.

மேலும் நோயாளி களுக்கு இந்த அறுவை சிகிச்சையின் மூலம் ஏற்ப டும் வலியானது குறைவாக இருக்கும். இவ்வகை அறுவை சிகிச்சை செய்வ தற்கான தொழில்நுட்ப பொருட்கள் அதிக விலை கொண்டதாக உள்ளதால், சாதாரண அறுவை சிகிச் சைக்காகும் செலவை விட 50 முதல் 75 ஆயிரம் ரூபாய் பணம் கூடுதலாக செலவாகும்.

ஆனால், பலன் விரை வில் தெரியும். 10 ஆண்டு களுக்கு முன்பு இருந்ததை விட தற்போது மக்களிடம் இம்முறை அறுவை சிகிச்சை நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. இது போல் புது புது தொழில் நுட்பங்களை கண்டுபிடித் தால்தான் அறுவை சிகிச்சை மேற்கொள்வதில் உள்ள பாதகங்கள் குறையும். இவ்வாறு அவர் பேசி னார்.

மியாட் இன்டர்நேஷ னலின் மேலாண்மை இயக் குனர் மோகன்தாஸ் பேசி யதாவது:

சில ஆண்டுகளுக்கு முன்பு ரோபோடிக் அறுவை சிகிச்சை முறை பெரும்பாலான மக்களால் பேசப்பட்டது. ஆனால் அதனுடைய முடிவுகள் சரியான பலனை அளிக்க வில்லை. ஆனால் இந்த சிறுதுவார ஊடுருவைச் சிகிச்சை முறை என்பது மக்களுக்கு நல்ல பலனை அளித்து வருகிறது. குறிப் பாக இந்த அறுவை சிகிச்சை மேற்கொண்டவர் கள், மருத்துவமனை களிலிருந்து விரைவிலேயே டிஸ்சார்ஜாகி வீட்டிற்கு சென்றுவிடலாம்.

இந்த அறுவை சிகிச் சையின் மூலம் ஏற்படும் வலியும் குறைவாக இருக் கும். எனவே இம்முறை தற்போது மக்களிடையே நல்ல வரவேற்பை பெற் றுள்ளது. இந்தியாவில் ருமாட்டிக் வால்வுலர் இதய நோய்கள் இளம் தலைமுறையினர் இடை யில் அதிகளவு தோன்று கிறது. இவர்களுக்கு சிறுது வார ஊடுருவைச்சிகிச் சையை பின்பற்றுவது இந்நோயினை குணப் படுத்த உதவுகிறது.

மியாட் மருத்துவமனை ஆரம்பிக்கும் போது 100 படுக்கை வசதிகளுடன் கூடிய ஒரே ஒரு ஸ்பெஷா லிட்டியாகவே தொடங்கப் பட்டது. இன்று 54 ஸ்பெ ஷாலிட்டியுடன் கூடிய 1000 படுக்கை வசதிகள் கொண் டதாக உருவாகியுள்ளது. ஒவ்வொருவரின் கடுமை யான உழைப்பே இதற் கெல்லாம் காரணம். இவ் வாறு அவர் பேசினார்.

இக்கருத்தரங்கில் மியாட் இன்டர்னேஷனலின் சேர்மன் மல்லிகா மோகன் தாஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.